6. அறிவிப்பு.

சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்ட முன் வடிவு, 1986. (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986 ஆம் ஆண்டு சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்ட முன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1986–ஆம் ஆண்டு சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 73/1986)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 36 மற்றும் அட்டவணை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 73/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

* 18-11-86 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.